## DEPOSITION OF WITNESS
## IN THE COURT OF DISTRICT MUNSIF, SATHANKULAM
## OS.No. 38/2023

**Deposition of Witness PW3**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.எட்வின் அருள்ராஜ்,<br>காவல் உதவி ஆய்வாளர்,<br>சாத்தான்குளம் காவல் நிலையம். |
| Father's/Husband's Name | : | திரு. பால்துரை |
| Village | : | -- |
| Taluk | : | -- |
| District | : | தூத்துக்குடி |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 6th day of February 2025

Date : 06.02.2025

**முதல் விசாரணை**

1. நான் தற்போது **சாத்தான்குளம்** காவல் நிலையத்தில், காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் நீதிமன்ற அழைப்பாணையின்பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். 09.02.2023 தேதிய சாத்தான்குளம் காவல் நிலைய மனு ரசீது எண்.146/2023 தொடர்புடைய புகார் மனு, புகார்தாரர் புகாருடன் இணைத்து கொடுத்த புகைப்படம், புகார்தாரரின் வாக்குமூலம், எதிர்மனுதாரரின் வாக்குமூலம், மனு ரசீது எண்.146/2023 மற்றும் மேற்படி புகார் மனுவிற்கான இறுதி அறிக்கை ஆகிய ஆவணங்களை நான் கொண்டு வந்துள்ளேன்.

2. மேற்படி ஆவணங்கள் எங்களது காவல் நிலையத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி புகார் மனுவானது மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரின் வாக்குமூலத்தின் அடிப்படையில் முடிக்கப்பட்டது என்றால் சரிதான். புகார் மனுவின் தன்மைக்கு ஏற்பவே விசாரணை முடிக்கப்பட்டது என்றால் சரிதான்.

3. **09.02.2023 தேதிய சாத்தான்குளம் காவல் நிலைய மனு ரசீது எண்.146/2023 தொடர்புடைய புகார் மனு, புகார்தாரர் புகாருடன் இணைத்து கொடுத்த புகைப்படம், புகார்தாரரின் வாக்குமூலம், எதிர்மனுதாரரின் வாக்குமூலம், மனு ரசீது எண்.146/2023 மற்றும் மேற்படி புகார் மனுவிற்கான இறுதி அறிக்கை**



P GOPALA ARASI

Digitally signed by P GOPALA ARASI
Date: 2025.02.06 16:50:16 +0530

**ஆகியவற்றின் உண்மை நகல் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. அருள்தாஸ் எங்களது காவல்நிலையத்தில் கொடுத்த புகார் தொடர்பாக சாத்தான்குளம் வட்டாட்சியரை விசாரிக்கவில்லை என்றாலும், வட்டாட்சியரிடமிருந்து வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றாலும் சரிதான். அதுபோல சாத்தான்குளம் பேரூராட்சி அலுவலக நிர்வாகியையும் நான் விசாரிக்கவில்லை என்றாலும், அவரிடமிருந்து வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றாலும் சரிதான்.

2. அனுமதி பெறாமல் விளம்பர பதாகை வைத்தது தொடர்பாக சாத்தான்குளம் வட்டாட்சியரோ, சாத்தான்குளம் பேரூராட்சி அலுவலக நிர்வாகியோ எவ்வித புகாரும் எங்களது காவல்நிலையத்தில் கொடுக்கவில்லை என்றால் சரிதான். விளம்பர பதாகை வைத்ததற்கான கம்புகளை யார் நட்டார்கள் என்பது எங்களது விசாரணை அறிக்கையில் துலங்காது என்றால் மேற்படி விபரம் குறித்து வாக்குமூலங்களாக எதுவும் பதிவு செய்யப்படவில்லை.

3. அ.சா.ஆ.1 வரிசையில் உள்ள புகார்தாரர் புகாருடன் இணைத்து கொடுத்த புகைப்படத்தில் மேற்படி விளம்பர பதாகை எந்த இடத்தில் வைக்கப்பட்டிருந்தது என்பது துலங்காது என்றால் சரிதான். மேற்படி புகார் மனு 09.02.2023 ல் கொடுக்ககப்பட்டது என்றால் சரிதான். புகார்தாரர் அருள்ராஜ் 27.03.2023 ல் தான் மேற்படி புகார் மனு விசாரணைக்கு ஆஜராகியிருந்தார் என்றால் சரிதான். அதுபோல எதிர்மனுதாரர் ஹெர்பான்சிங் பிரேம்குமாரும் 27.03.2023 ல் தான் மேற்படி புகார் மனு விசாரணைக்கு ஆஜராகியிருந்தார் என்றால் சரிதான்.

4. புகார் மனு கொடுக்கப்பட்டு, புகார்தாரர் அருள்ராஜ் 27.03.2023 ல் எங்களது காவல் நிலையத்தில் ஆஜராகியிருந்ததற்கு முன்பு, புகார்தாரர் எங்கள் காவல் நிலையத்திற்கு விசாரணைக்கு வந்ததாக எந்த குறிப்பும் அ.சா.ஆ.1 ல் துலங்காது என்றால் சரிதான். 27.03.2023 அன்று புகார்தாரர் அருள்ராஜ் எங்களது காவல் நிலைய விசாரணையின்போது நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளதால், மேற்படி புகாரின்பேரில் மேல்நடவடிக்கை தேவையில்லை என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான்.

P GOPALA ARASI
Digitally signed by P GOPALA ARASI
Date: 2025.02.06 16:50:23 +0530

5. அ.சா.ஆ.1ல் புகார்தாரரின் புகார் மனுவில் கண்ட அந்தோணி ஆரோக்கியராஜ், அந்தோணியூஜின், தங்கராஜன், ரங்கில் திரவியராஜ் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். 09.02.2023 அன்று பல நபர்கள் புகார்தாரரை தொலைபேசியில் தொடர்புகொண்டு விளம்பர பதாகை குறித்து புகார்தாரரிடம் தெரிவித்ததாக அ.சா.ஆ.1ல் புகார்தாரரின் புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள நபர்களை நான் விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரிதான்.

6. மேற்படி விசாரணையை மேற்கொண்டது விசாரணை அதிகாரி திரு.முத்து, ஆய்வாளர், சாத்தான்குளம் காவல் நிலையம் என்றாலும், நான் மேற்படி விசாரணை அதிகாரியின் ஆவணத்தின் அடிப்படையிலேயே சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரிதான்.

<u>**மறுவிசாரணை**</u>

புகார்தாரர் கொடுத்த புகார் மனுவில் சாத்தான்குளம் வட்டாட்சியர் எதிர்மனுதாரராக காட்டப்பட்டுள்ளாரா என்றால் இல்லை. மேற்படி புகார் குற்ற தொடர்புடையது அல்ல என்பதால் புலன் விசாரணை மேற்கொள்ள தேவையில்லை என்றால் சரிதான்.

<u>**குறுக்கு விசாரணை**</u>

அ.சா.ஆ.1ல் புகார் மனுவில் பொருள் என்ற காலத்தில் எவ்வித முன் அனுமதியும் பெறாமல், தன்னை அவமானப்படுத்தும் நோக்கில் பொது இடத்தில் விளம்பர பதாகை வைத்தது தொடர்பாக என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ.1ல் புகார் மனுவில் சாத்தான்குளம் வட்டாட்சியர் மற்றும் சாத்தான்குளம் பேரூராட்சி அலுவலகத்தில் முன் அனுமதி பெறாமல் விளம்பர பதாகை வைத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டது.

P GOPALA ARASI

Digitally signed by P GOPALA ARASI
Date: 2025.02.06 16:50:29 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தான்குளம்.